




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 360 | 4 Pages | 26.7.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 360 | 4 பக்கங்கள் | 26.7.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்**

**விளக்கம்:**
**இருவகைப் பற்றும் அற்றபொழுதே அந்நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும், இல்லையானால் (பிறவித்துன்பம் மாறி மாறிவந்து)நிலையாமைக்காணப்படும்.**

## ராகுல்காந்தி குஜராத் பயணம்




அகமதாபாத் ஜூலை 26

எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி நாளை குஜராத் மாநிலத்திற்கு செல்கிறார். வதோரா மாவட்டத்தில் காலை 10 மணிக்கு நடக்கும் கட்சி நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார். பிறகு குஜராத்மாநிலபுதியகாங்கிரஸ் நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இந்த நிகழ்ச்சியில் ராகுல்காந்தி சுமார் 4 மணி நேரம் இருந்து காங்கிரஸ் தொண்டர்களுடன் கலந்துரையாடுகிறார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குஜராத்தில் ஆட்சியை பிடிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாளைய கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

2027ம் ஆண்டு குஜராத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற குஜராத் சட்டசபை தேர்தலில், மாநிலத்தில் மொத்தமுள்ள 182 இடங்களில் காங்கிரஸ் 17 இடங்களை வென்றது. ஆனால் 5 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்த பிறகு, அவையில் கட்சியின் பலம் 12 ஆகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் கண்ணிவெடி தாக்குதல்; அக்னிவீரர் உயிரிழப்பு



ஸ்ரீநகர், ஜூலை 26

காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லை கட்டுப்பாட்டு கோடு அருகே ராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்துச் சிதறியதில் ஒரு ராணுவ வீரர்உயிரிழந்தார். மேலும் 2 பேர் படுகாயமடைந்தனர்.

இதில்உயிரிழந்தவீரர்லலித்குமார், அக்னிபாத்திட்டத்தின்கீழ்ராணுவத்தில் சேர்ந்தவர் ஆவார். காயமடைந்த இருவரும் ராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களின் உடல்நிலை தற்போது சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்: தேர்தல் ஆணையம் அதிரடி



பாட்னா, ஜூலை 26

பீகாரில், இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதையொட்டி, அம்மாநிலத்தில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளைத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. பீகார் மாநிலத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி, இன்றுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில் பீகாரில் உள்ள 7.9 கோடி வாக்காளர்களில் 65 லட்சம் வாக்காளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இறப்பு, இடம் பெயர்ந்தவர்கள், மற்றும் இரு இடங்களில் பதிவு என மொத்தம் 65.2 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் 1ந்தேதி வெளியிடப்படும் என்றும், அதில் தகுதியுள்ள அனைவரும் சேர்க்கப்படுவார்கள் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நெருங்கும் நிலையில், 65 லட்சம் பேரின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளதாகவும், இது இந்திய வரலாற்றில் மிகப்பெரிய வாக்காளர்கள் நீக்கமாக பார்க்கப்படுவதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறி வருகின்றனர்.

## இந்திய ராணுவத்திற்கு வான் பாதுகாப்பு ரேடார்கள் வாங்க ரூ.2,000 கோடிக்கு பாதுகாப்புத்துறை ஒப்பந்தம்



புதுடெல்லி, ஜூலை 26

இந்திய ராணுவத்திற்கு வான் பாதுகாப்பு ரேடார்களை வாங்குவதற்காக பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் ரூ.2,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் இன்று கையெழுத்திட்டது.

எதிரிகளின் போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் டிரோன்கள் உள்பட அனைத்து வகையான வான்வழி அச்சுறுத்தல்களையும் இந்த வான் பாதுகாப்பு ரேடார்களால் கண்டறிய முடியும் என பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

'இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டது, உருவாக்கப்பட்டது மற்றும் தயாரிக்கப்பட்டது' என்ற கட்டமைப்பின் கீழ் இந்த கொள்முதல் செயல்படுத்தப்படுகிறது. இது வான் பாதுகாப்பு படைப்பிரிவுகளை நவீனமயமாக்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்றும், இந்திய ராணுவத்தின்செயல்பாட்டுத்தயார்நிலையை மேம்படுத்துவதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது பங்களிக்கும் என்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பீகார் வாக்காளர்கள் நீக்கம்: 'நெருப்புடன் விளையாட வேண்டாம்'' மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 26

பீகாரில் உள்ள 7.9 கோடி வாக்காளர்களில் 65 லட்சம் வாக்காளர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இறப்பு, இடம் பெயர்ந்தவர்கள், மற்றும் இரு இடங்களில் பதிவு என மொத்தம் 65.2 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் 1ந்தேதி வெளியிடப்படும் என்றும், அதில் தகுதியுள்ள அனைவரும் சேர்க்கப்படுவார்கள் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், வாக்காளர்களை நீக்கியதற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;



"சிறப்பு தீவிர திருத்தம் (#SIR) தவறாகப் பயன்படுத்தப்பட்டு, பின்தங்கிய மற்றும் கருத்து வேறுபாடு கொண்ட சமூகங்களின் வாக்காளர்களை அமைதியாக அழிக்கவும், பாஜகவுக்கு ஆதரவாக செயல்படுவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இது சீர்திருத்தம் பற்றியது அல்ல. இது விளைவுகளைப் பற்றியது. எங்களை தோற்கடிக்க முடியாவிட்டால், நீங்கள் எங்களை நீக்க முயற்சிக்கிறீர்கள். நெருப்புடன் விளையாடாதீர்கள். நமது ஜனநாயகத்திற்கு ஏற்படும் எந்தவொரு அச்சுறுத்தலும் உறுதியான எதிர்ப்பை எதிர்கொள்ளும். தமிழ்நாடு முழு பலத்துடன் குரல் எழுப்பும். இந்த அநீதியை நம்மிடம் உள்ள அனைத்து ஜனநாயக ஆயுதங்களையும் பயன்படுத்தி எதிர்த்துப் போராடுவோம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 100 நாள் நடைபயணத்தை தொடங்கினார் அன்புமணி ராமதாஸ்

செங்கல்பட்டு, ஜூலை 26

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் சமூகநீதிக்கு எதிரான, மக்களை வாட்டி வதைக்கக் கூடிய, மக்களின் துயரங்களைத் துடைக்காமல் விளம்பர மோகத்தில் மகிழ்ச்சியடையும் திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும்,

இந்திய அரசியலமைப்பு சட்டத்தால் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் 1. சமூக நீதிக்கான உரிமை, 2. வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை, 3. வேலைக்கானஉரிமை, 4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை , 5. வளர்ச்சிக்கான உரிமை,

6. நல்லாட்சி மற்றும் அடிப்படை சேவைகளுக்கான உரிமை, 7.கல்வி,நலவாழ்வுக்கானஉரிமை ,8. மதுபோதைப் பொருள்களால்



பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை , 9. நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை , 10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கானஉரிமைஆகிய 10 வகையான அடிப்படை உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்குடனும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் இன்று (ஜூலை 25ஆம் நாள்) வெள்ளிக்கிழமை மாலை தொடங்கி தமிழ்நாடு நாளான நவம்பர் 1ஆம் தேதி வரை தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணம் என்ற தலைப்பில் நடைபயணம் மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திருப்போரூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு நடைபயணத்தை தொடங்கினார் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ். திருப்போரூரில் தொடங்கும் இந்த பயணம் தருமபுரியில் நிறைவடைய உள்ளது. 'உரிமை மீட்க தலைமுறை காக்க' என்ற தலைப்பில் இன்று தொடங்கி நவம்பர் 1ம் தேதி வரை 100 நாட்கள் நடைபயணம் செல்கிறார். முன்னதாக இந்த பயணத்திற்கு ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் 87 ஆவது பிறந்தநாள் விழா



பசுமை தாயகத்தின் மாநிலத் தலைவர் சௌமியாஅன்புமணிஅவர்களின்பிறந்தநாள் விழா, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அவர்களின் தமிழக மக்களின் உரிமை மீட்பு நடைபயணம் வெற்றி பெறவும் வேண்டி முப்பெரும் விழாவானது பாட்டாளி மக்கள் கட்சியின் மாணவர் சங்கத்தின் சார்பில் மாநில மாணவர் சங்கத் தலைவர் வழக்கறிஞர்விஜயராசாதலைமையில் சேலம் உடையப்பட்டியில் நடைபெற்றது.மாநில சட்டக் கல்லூரி பிரிவு செயலாளர்கள் மோகன் ராஜ், கோகுல கண்ணன்,வீரபாண்டி நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

சட்டக் கல்வி பிரிவு மாவட்ட அமைப்பாளர் பெரம்பலூர் பாலா கிஷோர், மாநில பொதுக் குழு உறுப்பினர் குமாரசாமி, காட்டூர் கவியரசு, சங்க மாவட்ட நிர்வாகிகள் வீரபாண்டி யுவராஜ்,

பெரம்பலூர் பாலகிஷோர்,தர்மபுரி ஹரிசுதன்,மேச்சேரி ரகு,தர்மபுரி நிஷாந்த், சஞ்சய், ஆட்டையாம்பட்டி யுவ பிரசாந்த், பூபதி, தர்ஷன், ஆட்டையாம்பட்டி பூபதி, நாமகிரிப்பேட்டை கண்ணன், கனகராஜ், வசந்தகுமார் மற்றும் பலர்கலந்து கொண்டனர். மேற்கண்ட நிகழ்ச்சியில் உடையாபட்டி ஓம் ஸ்ரீ கருமாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜையும். ,பொதுமக்களுக்கு இணைப்புகள் வழங்கியும், ஏழை மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது

# கோபிசெட்டிபாளையம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட கலிங்கியம் ஊராட்சி பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம்

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட கலிங்கியம் ஊராட்சி பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம் மஹாலில் நடைபெற்றது.முகாமினை காவல் துணை கண்காணிப்பாளர் சீனிவாசன், தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.ஏ.முருகன் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். முகாமில் வருவாய் துறை, ஊரக வளர்ச்சி, காவல், மருத்துவம், எரிசக்தி, மகளிர் உரிமை தொகை, நல வாரியம் உட்பட பல துறைகள் இடம் பெற்று இருந்தன.முகாமில் ஒரு சில மனுக்களுக்கு முகாமிலேயே தீர்வு காணப்பட்டு பயனாளியிடம் ஒப்படைக்க பட்டது.



இதில் தாசில்தார் இரா.சரவணன்,மண்டல துணை தாசில்தார் மணிமேகலை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சண்முக பிரியா, பா.ரவிச்சந்திரன்,பொது குழு உறுப்பினர் எஸ். எஸ். வெள்ளிங்கிரி,முன்னாள் யூனியன் சேர்மன் சரஸ்வதி குமாரசாமி,கோபி ,துணை செயலாளர் சி. எஸ்.கோதண்டபாணி,மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் திருவேங்கடம்,மாவட்ட சுற்றுச்சுழல் அணி தலைவர் கைலாஷ்குமார், ஊராட்சி செயலர் சிவகாமி உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், திமுக கவுன்சிலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மேலும் முகாமில் கலந்து கொண்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு பால் மற்றும் தேநீர் முகாம் தொடங்கியது முதல் மாலை வரை வழங்க வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம் ஏற்பாடு செய்திருந்தார்.




தினகனி



# ஈரோடு மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாம்: அமைச்சர் நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைத்தார்

ஈரோடு, ஜூலை 26

ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை பேரூராட்சி, ராசம்மாள் திருமண மண்டபம் மற்றும் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, பெருந்துறை ரோடு, ஆலயமணி மஹால் ஆகிய இடங்களில் இன்று (24.7.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்களில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கும் வகையில் 15.07.2025 அன்று உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இச்சிறப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 340 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இம்முகாமில் இடம்பெறாத துறை சார்ந்த மனுக்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மனுக்களை பெற்றிடவும் தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு வழங்கப்பட உள்ளது. இச்சிறப்பு திட்டத்தில் பெற்றப்பட்ட சில மனுக்களுக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, அவல்பூந்துறை பேரூராட்சி, ராசம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் பயனாளிகள் அளித்த மனுவின் அடிப்படையில் 3 பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக மின் இணைப்பு பெயர் மாற்ற ஆணை, தொழிலாளர் நல வாரிய அட்டை மற்றும் நத்தம் பட்டா பெயர் மாற்ற ஆணைகளை வழங்கினார். மேலும், ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, பெருந்துறை ரோடு, ஆலயமணி மஹாலில் நடைபெற்ற முகாமில் 4 பயனாளிகளுக்கு மின் இணைப்பு பெயர் மாற்று ஆணைகள் மற்றும் 3 நபர்களுக்கு புதிய சொத்துவரி, காலியிட வரி ஆணைகளை வழங்கினார். மேலும், அரசுத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

நாளை (25.07.2025) உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்கள் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4, குறிஞ்சி மஹால், விவிசி ஆர் நகர், பவானி நகராட்சி, பசுவேஸ்வரர் திருமண மண்டபம், மொடக்குறிச்சி பேரூராட்சி மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில், ஸ்ரீ கிருஷ்ணா மஹால், கொல்லன் கோவில் பேரூராட்சி, தாண்டாம்பாளையம் மேற்கு வீதி, திருமண மண்டபம், பெருந்துறை ஒன்றியம், கந்தாம்பாளையம், நசியனூர் அம்மன் மண்டபம், கோபிசெட்டி பாளையம் ஒன்றியம், ஸ்ரீ நவலடி மஹால், அலுவலகம் அருகில், கள்ளிப்பட்டி பிரிவு, கலிங்கியம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது. இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# துரைப்பாக்கம் பகுதியில் நடந்து சென்ற பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் கைது

சென்னை, ஜூலை 26

சென்னை, பெருங்குடியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு, அப்பகுதியில் தங்கி வரும் 23 வயது பெண் ஒருவர் கடந்த 14.07.2025 அன்று காலை வேலை முடித்து வீட்டிற்கு செல்ல குமரன் நகர் பிரதான சாலையில் நடந்து செல்லும்போது, இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் மேற்படி பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு, அவரது இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் 9 துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். 9 துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி



சக்திவேல், வ/30, ஆண்கள் விடுதி, பெருங்குடி, சென்னை (சொந்த ஊர் கஞ்சனூர் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்) என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி சக்திவேல் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தருமபுரி, ஜூலை 26

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சியில் கே.பி.ஜே திருமண மண்டபம், தருமபுரி ஒன்றியத்தில் அளே தருமபுரி சமுதாய கூடம், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் செங்குந்தர் திருமண மண்டபம் உள்ளிட்ட இடங்களில் அரசுத் துறைகளின் சேவைகளை, மக்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், நேரில் பார்வையிட்டார்கள்.



“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்களை அளிக்கவந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்கினார்கள். தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சி, கே.பி.ஜே திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, மனுக்களை அளிக்கவந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்கினார்கள்.

இத்திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகள் வேண்டி விண்ணப்பித்த பயனாளிகளின் மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உடனடியாக இத்திட்ட முகாமில் 20 பயனாளிகளுக்கு பட்டாமாறுதலுக்கான ஆணைகள், பிறப்பு சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டைகளை மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், வழங்கினார்கள்.

இதனைதொடர்ந்து, தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், அளே தருமபுரி சமுதாய கூடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

இத்திட்ட முகாமில் கூட்டுறவுத்துறையின் சார்பில் இராஜாப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 10 உறுப்பினர்களுக்கு ரூ.4.06 இலட்சம் மதிப்பில் விவசாய கடன்உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரெ. சதீஸ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். மேலும், நலத்திட்ட உதவிகள் வேண்டி கோரிக்கை மனு விண்ணப்பித்த 5 பயனாளிகளுக்கு மகாத்மா காந்தி தேசியஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் வேலைக்கான அடையாள அட்டைகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள்.

தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சி, செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

தருமபுரி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று முதல் 03.10.2025 வரை மொத்தம் 176 முகாம்கள் நடைபெறவுள்ளது. நகர்ப்புறங்களில் 13 அரசு துறைகளை சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசு துறைகளை சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்பட உள்ளது.

இன்றைய தினம் வரை தருமபுரி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், 18 முகாம்கள் நடைபெற்றுள்ளது.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிக பட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். இம்முகாம்களில் அரசின் சேவைகள் வழங்கும் பல்வேறு துறைகளுக்கான தனித்தனி அரங்குகள் அமைக்கப்பெற்று, அந்தந்த துறைகளுக்கு தொடர்பான மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படுகிறது.

# கரூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் 72 விவசாயிகளுக்கு ரூ. 1.39 கோடி மதிப்பீட்டில் மானியம் வழங்கப்பட்டுள்ளது

கரூர், ஜூலை 26

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், லாலாபேட்டையில் வேளாண் பொறியியல் துறையின் சார்பாக முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சூரிய சக்தி பம்பு செட்டுகளின் செயல்பாட்டினை மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் செய்தியாளர் பயணத்தின் போது நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்விற்கு பின் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசு வேளாண் பெருங்குடி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப விவசாயிகள் பயிர் சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேளாண் பொறியியல் துறையின் சார்பாக முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் மூலம் மொத்த விலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு 80 சதவீதமும், பொதுப்பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த இதர விவசாயிகளுக்கு 70 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 60 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் மூலம் 72 விவசாயிகளுக்கு ரூ. 1.39 கோடி மதிப்பீட்டில் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண் இயந்திரமய மாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின் மூலம் பல்வேறு வேளாண் இயந்திரங்களை தனிப்பட்ட விவசாயிகள் வாங்குவதற்கும், வேளாண் இயந்திர வாடகை மையங்களை அமைப்பதற்கும் மானியமாக தனிப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு 70 சதவீதமும், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மற்றும் பொதுப் பிரிவின் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதமும், கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு 80 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 8.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு செல்லாமலே தங்கள் வீடு அல்லது வயல்களிலிருந்தே உழவர் செயலியிலுள்ள இ வாடகைசெயலி என்னும் தெரிவின் மூலம் அல்லது இணையதள முகவரி மூலமும் முன்பதிவு செய்து பயன் பெறலாமென மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ஈரோடு வேளாளர் மருந்தியல் கல்லூரி செய்தி மடல் வெளியீட்டு விழா

ஈரோடு, ஜூலை 26

ஈரோடு,திண்டல்,மாருதி நகரில் இயங்கிவரும் வேளாளர் மருந்தியல் கல்லூரியில் செய்திமடல் வெளியீட்டுவி ழா 2025 ( 2025) நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் கல்லூரி முதல்வர் முனைவர் அ. சரவண குமார் வரவேற்றார். இந் நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் எஸ். டிசந்திர சேகர் தலைமை தாங்கினார்.




இவ்விழாவில் சிறப்புவிருந்தினராக நிர்வாக குழு உறுப்பினர், பார்மசி கவுன்சில் ஆப் இந்தியா, புதுடெல்லி மற்றும் கல்விபதிவாளர், அன்னை தெரசா முதுகலை மற்றும் சுகாதார அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி முனைவர். கவிமணி, கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி அறக்கட்டளை உறுப்பினர் யுவராஜா கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார். இதைத் தொடர்ந்து, மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக, கல்லூரி பேராசிரியர் முனைவர் எஸ். மோகன்ராஜ் நன்றியுரையாற்றினார்

# பெரியகுளத்தில் கோவிலுக்கு சொந்தமான இடத்தை காங்கிரஸ் கட்சியினர் தங்களுக்கு சொந்தமான இடம் கூறுவதால் இடத்தைப் பார்வையிட்ட பொதுமக்கள் முற்றுகை

பெரியகுளத்தில் கோவிலுக்குசொந்தமானஇடத்தை காங்கிரஸ் கட்சியினர் தங்களுக்கு சொந்தமான இடம் கூறுவதால் இடத்தைப் பார்வையிட்ட பொதுமக்கள் முற்றுகை யிட்டு இந்த இடம் கோவிலுக்கு சொந்தம் என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்



தேனி மாவட்டம் பெரியகுளம் பட்டாளம்மன் கோவில் தெருவில் உள்ள அருள்மிகு பட்டாளம்மன் சாமி கோவில் உள்ளது

இக்கோவிலுக்கு சொந்தமான இடம் அப்பகுதியில் உள்ளனர் அந்த இடத்தின் வரும் வருமானத்தை வைத்து பட்டாளம்மன் கோவில் தெரு பொதுமக்கள் அருள்மிகு பட்டாளம்மன் கோவிலுக்கு செலவு செய்து வந்தனர்

இந்நிலையில் அந்த இடத்தில் தேர்தல் நேரங்களில் காங்கிரஸ் கட்சியினர் தற்காலிக அலுவலகம் அமைத்திருந்ததாகவும்

தற்போது அந்த இடம் காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமானது என காங்கிரஸ் கட்சியை நிர்வாகிகள் இன்று காலை அந்த இடத்தை பார்வையிட்டனர் மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சொத்துப் பாதுகாப்பு குழு தலைவர் தங்கபாலு இன்று பெரியகுளத்துக்கு வருகை தந்து அந்த இடத்தை பார்வையிடுவதாக அப்பகுதியில் பேனர்கள் வைக்கப்பட்டு கட்சி நிர்வாகிகள் இடத்தை பார்வையிட்டபோது அதற்கு அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து இது கோவிலுக்கு சொந்தமான இடம் எனக்கூறி காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

அப்போது காங்கிரஸ் கட்சியினர் தங்களுக்கு சொந்தமான இடம் என்று கூறியதற்கு அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்கோவிலுக்கு சொந்தமான இடத்தை காங்கிரஸ் கட்சியினர் தங்களுக்கு சொந்தமான இடம் என்று கூறி ஆக்கிரமிப்பு செய்ய உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் குற்றம் சாட்டி இந்த இடம் கோவிலுக்கு மட்டும் தான் சொந்தம் என தெரிவித்துள்ளனர்

# தாராபுரத்தில் தெரு நாய்களிடமிருந்து மக்களை பாதுகாக்க கோரி த.வெ.க வினர் மனு

தாராபுரம் ஜூலை 26

தெரு நாய்களிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்க கோரி தமிழக வெற்றிக் கழகத்தினர் மனு அளித்துள்ளனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் ஆலோசனைப்படி தாராபுரம் நகராட்சி ஆணையரிடம் தமிழக வெற்றி கழகத்தினர் மனு அளித்துள்ளனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது, தாராபுரம் நகரில் தெரு நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. குறிப்பாக கொளிஞ்சி வாடி, மீனாட்சிபுரம், மதுக்கம்பாளையம் பிரிவு, சின்னக் கடை வீதி அரச மரம், காமராஜபுரம் மற்றும் கோட்டைமேடு ஆகிய பகுதிகளில் தெரு நாய்கள் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை கடித்ததால் அவர்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த வாரத்தில் மட்டும் 8 நபர்கள் நாய் கடித்ததால் சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர். ஆகவே தெரு நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்தி பொதுமக்களை பாதுகாத்திட தாராபுரம் நகராட்சி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் நகரச் செயலாளர் சார்லி லிட்டர், நகர இணைச் செயலாளர் தாரை பிளக்ஸ் ரமேஷ் எம்.பி., துணை செயலாளர் மின்னல் சிலம்பு, செயற்குழு உறுப்பினர் தினகரன், 4வது வார்டு கிளைச் செயலாளர் தினேஷ் ஆகிய கலந்து கொண்டனர்.


# ஈரோடு வடக்கு மாவட்டம் இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம் அறிக்கை

ஈரோடு வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் வருகிற 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் திரு.என்.நல்லசிவம் அவர்கள் தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.சையத் நாஸிர் அகமது, செ.கார்த்திகேயன், வி.வைத்தீஸ்வரன், கே.ஜி.வினோத்குமார், கே.எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையிலும் கோபிசெட்டிபாளையம் ஈரோடு வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.



இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும்தவறாமல்கலந்துகொள்ளுமாறும்ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள வார்டு கிளைக் கழக வாரியாக இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிப்பது குறித்தும், தெருமுனைப் பிரச்சாராம் நடத்துவது குறித்தும், இளைஞர் அணி ஆக்கப் பணிகள் குறித்தும் நடைபெறுகிறது என ஈரோடு வடக்கு மாவட்டம் இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவே ங்கடம் தனது அறிக்கையில் கூறியு ள்ளார்.

# சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு: 14 நாட்களுக்கு பின் குற்றவாளி கைது



திருவள்ளூர் ஜூலை 26 கடந்த, 12ம் தேதி, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த, 10 வயது சிறுமி மர்ம நபரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். போலீசாரின் விசாரணையின் போது சிறுமியை வாலிபர் ஒருவர் பின் தொடர்ந்து சென்று கடத்திச்செல்லும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

குற்றவாளியை பிடிக்க போலீசார் தனிப்படை அமைத்து தேடி வந்த நிலையில், எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதையடுத்து, இவ்வழக்கு விசாரணைக்கு உதவியாக, மர்ம நபரை அடையாளம் காணவும், துப்பு துலக்க வும் பயனுள்ள குறிப்பிடத்தக்க மற்றும் நம்பகமான தகவல்கள் தருவோருக்கு, 5 லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்படும் என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 14 நாட்களாக போலீசார் தேடி வந்த நிலையில், மேற்கு வங்காளத்தை சேர்ந்த வாலிபர் ஒருவரை போலீசார் கைது செய்தனர். சூலூர்பேட்டை ரெயில் நிலையத்தில் இருந்த வாலிபரை தனிப்படை போலீசார் பிடித்துள்ளனர். பிடிபட்ட இளைஞரின் புகைப்படத்தை பாதிக்கப்பட்ட சிறுமியிடம் போலீசார் காட்டினர். தன்னை பாலியல் வன்கொடுமை செய்த நபர் இவர்தான் என சிறுமி அடையாளம் காட்டினார்.

அவரிடம் போலீசார் நடத்திய விசாரணையில், முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்துள்ளார். அவர் மனநலம் பாதித்தவரா? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கீழடி அகழாய்வு அறிக்கை தாமதம் ஏன்? நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் பதில்




டெல்லி, ஜூலை 26 கீழடி அகழாய்வின் தொல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளை பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதிபூண்டுள்ளதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். கீழடியில் 2013 -2016 ஆண்டுகளில் நடத்தப்பட்ட இரு கட்ட ஆய்வறிக்கையை நிறுத்தி அறிக்கை வெளியிடுவதை தாமதப்படுத்தியது தொடர்பாக மாநிலங்களவையில் திருச்சி சிவா கேள்வி எழுப்பியிருந்தார்.

திமுக எம்.பி திருச்சி சிவா எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பதில் அளித்துள்ளார். மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில், "வைகை நதிப் படுகையில் ஆய்வு நடத்திய பிறகு, கீழடியின் தொல்பொருள் திறனை இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அடையாளம் கண்டுள்ளது.

2014-15, 2015-16 மற்றும் 2016-17 ஆண்டுகளில் இந்த இடம் அகழ்வாராய்ச்சிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. முக்கியமான இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் மாநில தொல்பொருள் துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகின்றன. தற்போது, கீழடி அகழ்வாராய்ச்சியை தமிழக தொல்பொருள் துறை நடத்தி வருகிறது" என்று கூறியுள்ளார். மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் அளித்த உறுதிமொழிக்கு மாறாக 9 மாதங்களாகியும் கீழடி அறிக்கை இன்னும் வெளியிடப்படாதது குறித்த திருச்சி சிவாவின் மற்றொரு கேள்விக்கு, அப்படியொரு உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும், 2014-15, 2015-16 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கை ஏற்கெனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பதில் அளித்துள்ளார். தொடர்ந்து கீழடி அகழ் வாராய்ச்சி அறிக்கையை தயாரித்த மூல ஆய்வாளரிடம் மீண்டும் அறிக்கையை தாக்கல் செய்ய என்ன காரணம் என்ற திருச்சி சிவாவின் மூன்றாவது கேள்விக்கு, "ஆய்வுக்குத் தலைமை தாங்கும் தொல்பொருள் ஆய்வாளர், சமர்ப்பிக்கும் அறிக்கையை நிபுணர்கள் குழு ஆய்வுக்கு உள்படுத்தி சரிபார்க்கும். பிறகு நிபுணர் குழுவின் முடிவுகள் அறிக்கையில் சேர்க்கப்பட்டு ஆய்வுக்குத் தலைமை தாங்கிய ஆய்வாளரின் ஒப்புதலுடன் அனுவல்பூர்வமாக அறிக்கையை தொல்லியல்துறை வெளியிடும்.

இந்த விஷயத்தில் தலைமை ஆய்வாளரின் அறிக்கை ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டு நிபுணர் குழுவின் முடிவுகள் அவரிடம் பகிரப்பட்டுள்ளன. கீழடி அகழாய்வின் தொல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளை பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதிபூண்டுள்ளது" என்று அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் குறிப்பிட்டுள்ளார்.

# தூத்துக்குடியில் உடல் சிதைந்த நிலையில் ஆண் சடலம் மீட்பு: போலீஸ் விசாரணை

தூத்துக்குடி ஜூலை 26 தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு கோவில்பட்டி நெடுஞ்சாலையில் ராஜாபுதுக்குடி கிராமம் அருகில் உடல் முழுவதும் சிதைந்த நிலையில் ஆண் சடலம் கிடந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த கயத்தாறு காவல் நிலைய போலீசார் சம்பவஇடத்திற்குசென்று விசாரணை நடத்தினர்.

இறந்து கிடந்தவருக்கு சுமார் 55 வயது இருக்கும். இவர் நடந்து செல்லும் போது ஏதோ வாகனம் மோதி இறந்துள்ளார். நீல நிற சட்டையும், அரைக்கால் டவுசரும் அணிந்திருந்தார். அவர் உடல் முழுவதும் சிதைந்த நிலையில் கிடந்தது. இவர் யார் எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை.

போலீசார் அவரது சடலத்தை பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்த நபர் குறித்து தகவல் அறிந்தவர்கள் 9498101848 என்ற எண்ணுக்கு தகவல் தெரிவிக்கலாம் என்று கயத்தாறு காவல் நிலைய போலீசார் தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் மோடி வருகை தமிழகத்துக்கு பெருமை அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு



சென்னை, ஜூலை 26 கங்கை கொண்ட சோழபுரத்தில் நடைபெறும் ராஜேந்திர சோழனின் ஆயிரமாவது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பது தமிழகத்திற்கு கிடைத்த பெருமை என அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில், மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்தநாள் மற்றும் அவரது கங்கை வெற்றியின் ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, ஜூலை 27, 2025 அன்று நடைபெறும் ஆடி திருவாதிரை விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார். இந்த விழாவில், பிரதமர் மோடி ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தை வெளியிடுவார்.

இது தமிழகத்திற்கு பெருமை அளிக்கும் தருணமாக உள்ளதாக, தமிழக நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். இது குறித்து பேசிய அவர் ராஜேந்திர சோழனின் கடாரம் படையெடுப்பு மற்றும் கடல் கடந்த படையெடுப்பின் 1,000வது ஆண்டை குறிக்கும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி வருகிற ஜூலை 27ஆம் தேதி கங்கைகொண்ட சோழபுரத்து வருகை தர உள்ளார். இது தமிழ் நாட்டுக்கு கிடைத்துள்ள பெருமையாகும் என நெகிழ்ச்சியுடன் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இந்த முப்பெரும் விழா, ராஜேந்திர சோழனின் பிறந்தநாள், கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் கட்டுமான ஆயிரமாவது ஆண்டு, மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அவரது கடல்சார் பயணத்தின் ஆயிரமாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நடைபெறுகிறது. பிரதமர் மோடி, ஜூலை 26 அன்று கேரளாவில் அரசு விழாவில் பங்கேற்ற பின்னர், தூத்துக்குடி விமான நிலையத்திற்கு இரவு 7:50 மணிக்கு வருகை தருவார். அங்கு புதிய முனைய திறப்பு விழாவில் பங்கேற்ற பிறகு, இரவு 10:35 மணிக்கு திருச்சி சென்று அரசு விருந்தினர் மாளிகையில் தங்குவார். மறுநாள் காலை 11 மணிக்கு ஹெலிகாப்டரில் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருவார். விழாவில், பிரதமர் மோடி வாரணாசியில் இருந்து கொண்டு வரும் கங்கை நீரைப் பயன்படுத்தி, பிரகதீஸ்வரர் கோவிலில் மகா அபிஷேகம் செய்வார், சுவாமி தரிசனம் செய்து, சில நிமிடங்கள் தியானம் செய்வார்.

மேலும், கோவில் சிற்பங்களையும், தொல்லியல் துறையின் புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிடுவார். இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியும் இவ்விழாவில் இடம்பெற உள்ளது. இந்த விழாவை தமிழக அரசு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவின்படி, அரசு விழாவாகக் கொண்டாடுகிறது,

மேலும் முதல் வரும் இதில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், இரா.இராஜேந்திரன், சா.சி.சிவசங்கர், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி உள்ளிட்டோர் இவ்விழாவைத் தொடங்கி, கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடினர். அமைச்சர் தங்கம் தென்னரசு, ராஜேந்திர சோழனின் படைபலம், நிர்வாகத் திறன், நீர் மேலாண்மை ஆகியவை உலகளவில் புகழ்பெற்றவை. இந்த விழாவில் பிரதமர் பங்கேற்பது, தமிழர்களின் பண்பாட்டு பெருமையை உலகுக்கு எடுத்துச் செல்லும் தருணமாக அமையும், என்று கூறினார். மேலும், இந்த விழாவிற்காக, அரியலூர் மற்றும் அண்டை மாவட்டங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் பொ. இரத்தினசாமி மற்றும் காவல் கண்காணிப்பாளர் விஷ்வேஷ் பாலசுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர், பிரதமரின் ஹெலிகாப்டர் இறங்கு தளத்தை ஆய்வு செய்தனர். ராஜேந்திர சோழனின் சோழகங்கம் ஏரியை சுற்றுலா தலமாக்க ரூ.7.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் மாளிகைமேடு பகுதியில் அகழாய்வுகள் மற்றும் அருங்காட்சியகம் அமைக்கும் பணிகளும் நடைபெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருமூர்த்தி அணையிலிருந்து நீர் திறப்பு நீர்வளத்துறை அறிவிப்பு



திருப்பூர் . ஜூலை 26 தமிழக நீர்வளத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

திருப்பூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு படுகை ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பாசனப் பகுதிகளுக்கு 27.07.2025 முதல் 31.05.2026 வரை, நீரிழப்பு உட்பட மொத்தம் 700 மில்லியன் கனஅடிக்கு மிகாமல், தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள 2786 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் கைது செய்ததாக கூறி வாலிபரிடம் ரூ.20 லட்சம் மோசடி

தென்காசி, ஜூலை 26 கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகேயுள்ள கொஞ்சிரைவை சேர்ந்தவர் அஷ்ரப். இவரை சம்பவத்தன்று செல்போனில் தொடர்பு கொண்ட நபர், பண மோசடியில் உங்களுக்கு தொடர்புள்ளதாக வும், டிஜிட்டல் கைது செய்துள்ளதாகவும் கூறினார். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அஷ்ரப், நான் அப்படி எதுவும் மோசடி செய்யவில்லை எனக்கூறி இணைப்பை துண்டித்துவிட்டார். ஆனால் அஷ்ரப்புக்கு தொடர்ந்து வீடியோ கால் வந்துள்ளது.

அதனை எடுத்து பேசிய போது, எதிர் முனையில் போலீஸ் சீருடையில் 2 பேர் தோன்றினர். அவர்கள் பேசுகையில், உங்களை டிஜிட்டல் கைது செய்துள்ளதை உறுதிசெய்துள்ளோம். அதில் இருந்து தப்பிக்க வேண்டுமென்றால் ரூ.20 லட்சத்தை நாங்கள் கூறும் வங்கி கணக்கிற்கு செலுத்த வேண்டும். விசாரணை முடிந்ததும் அந்தப் பணத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பித்தந்து விடுவோம் என்றனர்.

மேலும் வங்கி கணக்கு தகவல்களையும் அளித்தனர். இதனால்பீதியடைந்த அஷ்ரப் வீடியோ காலில் வந்த போலி போலீசார் தெரிவித்த வங்கிக் கணக்கிற்கு ரூ.20 லட்சத்தை செலுத்தியுள்ளார். எனினும் குறிப்பிட்ட நாட்களுக்குள் பணம் திருப்பித் தராததால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அஷ்ரப் திருவனந்தபுரம் சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார்.

இதன்பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் அஷ்ரப் செலுத்திய ரூ.20 லட்சம் தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே யு ள குலசேகரப்பட்டியைச் சேர்ந்த பேச்சிகுமார் (வயது 27) என்பவருடைய வங்கிக் கணக்கிற்குச் செலுத்தப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து உடனே திருவனந்தபுரம் சைபர் கிரைம் போலீசார் கடந்த 2 நாட்களுக்கு முன்பு அங்கு சென்று பேச்சிகுமாரை பிடித்து விசாரித்தனர். அதில், கடையம் பெரும்பத்தை சேர்ந்த கிரிப்சன் என்பவர் கூறியதால் இந்த மோசடியில் ஈடுபட்டதாக பேச்சிகுமார் போலீசாரிடம் கூறினார். பேச்சிகுமாரின் வங்கிக் கணக்கை பயன்படுத்தியதற்காக அவருக்கு குறிப்பிட்ட தொகையை கிரிப்சன் கமிஷனாக கொடுத்துள்ளதும் போலீசார் விசாரணையில் தெரிய வந்தது.

வங்கிக்கணக்கு மூலம் மோசடி செய்த பணத்தை கிரிப்சன் ரூ.1 கோடி மதிப்புள்ள கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனையில் செலுத்தியுள்ளது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து பேச்சிகுமாரை கைது செய்த போலீசார் அவர் அளித்த தகவலின் பேரில் கிரிப்சனையும் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் இருவரையும் கேரளாவுக்கு அழைத்து சென்று கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். இதையடுத்து இருவரையும் கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# திருவள்ளூரில் பச்சிளம் குழந்தைகளை விற்க முயற்சி: 3 பெண்கள் கைது




திருவள்ளூர், ஜூலை 26 சென்னையை சேர்ந்த கார்த்திக் என்பவரிடம் பெண் ஒருவர் செல்போனில் தொடர்பு கொண்டு குழந்தை ஒன்று விற்பனைக்கு உள்ளது என்றும், ரூ.12 லட்சம் கொடுத்தால் குழந்தையை பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார்.


இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த கார்த்திக், உடனடியாக போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், கார்த்திக்கை வைத்து அந்த பெண்ணை பிடிக்க திட்டம் போட்டனர். அதன்படி, கார்த்திக் அந்த பெண்ணிடம் குழந்தையை வாங்க எங்கே வரவேண்டுமென செல்போனில் கேட்டுள்ளார். அதற்கு அந்த பெண், குழந்தையை விற்கும் பெண்ணுக்கு ரூ.10 லட்சம், தரகராக செயல்பட்ட தனக்கு ரூ.2 லட்சம் என மொத்தம் ரூ.12 லட்சம் பணத்துடன் திருவள்ளூர் மாவட்டம் புழல் பகுதிக்கு வருமாறு கூறியுள்ளார்.

அதன்படி, கார்த்திக் மற்றும் போலீசார், புழல் பகுதிக்கு சென்றனர். அப்போது அங்குஸ்கூட்டியில் வந்த பெண் ஒருவர் ஆண் குழந்தையை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்தார். தொடர்ந்து, அங்கு மறைந்திருந்த போலீசார், பெண்ணை கையும் களவுமாக பிடித்தனர். தொடர்ந்து அவரிடம் நடத்திய விசாரணையில், அவரது பெயர் வித்யா என்பதும், குழந்தை விற்பனையில் இடைத்தரகராக செயல்பட்டதும் தெரிய வந்தது.

இதையடுத்து, வித்யாவின் வீட்டில் இருந்த குழந்தையின்தாய் மற்றும் மற்றொரு பெண் என 3 பேரை கைதுசெய்த போலீசார், அவர்களிடம் இருந்து 2 பச்சிளம் குழந்தைகளை மீட்டனர்.

வித்யாவின் செல்போனில் பச்சிளம் குழந்தைகளின் படங்கள் அதிக அளவில் இருந்ததால், அவர் இதையே தொழிலாக செய்து வந்தாரா? எத்தனை பேருக்கு குழந்தைகளை விற்றுள்ளார் என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடி அமாவாசையை முன்னிட்டு ஸ்ரீ சக்தி வீட்டு மாரியம்மன் ஸ்ரீ கோட்டை கருப்புசாமி ஆலயத்தில் மிளகாய் கூட்டு அரைத்து அபிஷேகம்



தர்மபுரி, ஜூலை 26 தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த வட்டுவனஹள்ளி பஞ்சாயத்துஉட்பட்ட ஜெல்மாரம்பட்டி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ சக்தி வீட்டு மாரியம்மன் ஸ்ரீ பெரியாண்டவர் ஸ்ரீ பெரியாண்டச்சி ஸ்ரீ வனருத்ரகாளி ஸ்ரீ கோட்டை கருப்புசாமி ஆலயத்தில் பூசாரி மாதப்பன் மீது 108 கிலோ அரைத்த மிளகாய் கூட்டு அபிஷேகம் நடைபெற்றது

இதனை தொடர்ந்து கணபதி ஹோமம் கொடியேற்றம் கங்கணம் கட்டுதல் தீபாரதனை நடைபெற்றது அன்று மாலை கூழ் ஊற்றுதல் நிகழ்வும் நடைபெற்றது மேலும் கணபதி ஹோமம் ஸ்ரீ கோட்டை கருப்புசாமி ஸ்ரீ வனருத்ரகாளி நவகிரகங்களுக்கு ஹோமம் மகாபூர்ணாஹுதி தீபாரதனை நடைபெற்றது அருள்மிகு ஸ்ரீ சக்தி வீட்டு மாரியம்மன் திருக்கரகம் அளித்தல் தீர்த்தகும் அழைத்தல் கங்கை பூசை கூடை அழைத்தல் கங்கை பூசை அருள்மிகு ஸ்ரீ கோட்டை கருப்பசாமி ஸ்ரீ சக்தி வீட்டு மாரியம்மன் ஸ்ரீ வர்ணருத்ரகாளி சுவாமிகளை பல்லாக்கில் அழைத்து வருதல் நிகழ்வும் நடைபெற்றது

இதனைத் தொடர்ந்து தீமிதி திருவிழாவும் அருள்மிகு ஸ்ரீ கோட்டை கருப்புசாமிக்கு முப்பூசை நிகழ்வு நடைபெற்றது மேலும் கத்தி மேல் நின்று கருப்புசாமி அருள்வாக்கும் நடைபெற்றது இதனை தொடர்ந்து பிடிக்காசு வழங்குதல் நிகழ்வும் நடைபெற்றது அன்று இரவு கும்பபூசை நிகழ்வு நடைபெற்றது

இதில் நாட்ரம்பாளையம் ஆலமரத்துப்பட்டி சின்னப்பெரமனூர் பென்னாகரம் திகிலோடு தாசம்பட்டி பவளந்தூர் எனும்மல்மந்தை பிஅக்ரஹாரம் ஆதனூர் பெங்களூர் உள்ளிட்ட ஊர்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் மேலும் கத்தி மேல் நின்று அருள்வாக்கும் நடைபெற்றது இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது

# திருவள்ளூரில் பச்சிளம் குழந்தைகளை விற்க முயற்சி: 3 பெண்கள் கைது

தூத்துக்குடி ஜூலை 26 கடந்த 21.6.2025 அன்று தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் பகுதியில் கஞ்சா விற்பனை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான தூத்துக்குடி, சிலுவைப்பட்டி பகுதியைச் சேர்ந்த காளிராஜன் மகன் கார்த்திக்ராஜா (வயது 24), திருநெல்வேலி, ராஜவல்லிபுரம் பகுதியைச் சேர்ந்த மந்திரமூர்த்தி மகன் ஜெபராஜ்(28) மற்றும் கடந்த 24.6.2025 அன்று தூத்துக்குடி மதுவிலக்கு அமலாக்கு பிரிவு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான தூத்துக்குடி, டீஎம்பி காலனி பகுதியைச் சேர்ந்தவர்களான மாடசாமி மகன் மாரிலிங்கம்(24), பாலா மகன் ராஜ்குமார்(29), தூத்துக்குடி, அண்ணாநகரைச் சேர்ந்த வசமுத்து மகன் அருஞ்சுணைமுத்து(எ) அருண்(22) ஆகிய 5 பேரையும் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் நேற்று (24.7.2025) குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி சம்பந்தப்பட்ட காவல் நிலைய போலீசார் மேற்சொன்ன 5 பேரையும் நேற்று ஒரே நாளில் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இந்த ஆண்டு இதுவரை 81 பேர் குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

26.7.2025

# பௌத்தர்கள் புனித பயணம்: அரசு நிதியுதவி பெற விண்ணப்பிக்கலாம் தூத்துக்குடி கலெக்டர் தகவல்




தூத்துக்குடி ஜூலை 26

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டைச் சேர்ந்த 150 பௌத்த நபர்களுக்கு தமிழ்நாடு அரசால் 2025 26ம் ஆண்டில் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜய தசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவிற்கு புனித பயணம் மேற்கொண்டு திரும்பியவர்களுக்கு ECS முறையில் நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.5,000 வரை நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் பௌத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/ சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 30.11.2025க்குள் உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி: ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நடப்பாண்டில் 4வது முறையாக நிரம்பிய மேட்டூர் அணை



சேலம், ஜூலை 26

சேலம் மாவட்டம் மேட்டூர் அணை நடப்பாண்டில் நான்காவது முறையாக நிரம்பியதைத் தொடர்ந்து இன்று மாலை 16 கண் மதகுகள் வழியாக மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் வருவாய் துறை சார்பில் காவிரி கரையோர மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் வெள்ள அபாய எச்சரிகை விடுத்து வருகின்றனர்.

மேட்டூர் அணையின் 16 கண் மதகு அருகே உள்ள தங்கமாபுரி பட்டினம், அண்ணா நகர் பெரியார் நகர், சேலம் கேம்ப் உள்ளிட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி மூலமாக பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (26.7.2025)

**மேஷம்** உங்களின் முயற்சிக்கு சாதகமான நாள். புதிய வாய்ப்பு வரும். தொழிலில் முன்னேற்றம். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**ரிஷபம்** நிதியில் கவனம் தேவை. குடும்பத்தில் அனாவசிய விவாதங்கள் ஏற்படலாம். பயணத்திலே சிரத்தை தேவை.

**மிதுனம்** வேலை தொடர்பான நன்மை. புதிய திட்டம் வெற்றியாகும். மனம் உற்சாகம் அடையும். தாமதம் ஆன பணிகள் நிறைவேறும்.

**கடகம்** உணர்வுகளில் உயர்வு. குடும்ப சந்தோஷம். பண விஷயத்தில் முன்னேற்றம். குழந்தைகளால் மகிழ்ச்சி. அதிர்ஷ்ட நிறம்: நீலம் | எண்: 2

**சிம்மம்** சமயோசிதமாக நடந்துகொள்வது நல்லது. சக பணியாளர்களுடன் சுமுகம் தேவை. பழைய சிரமம் விலகும்.

**கன்னி** நிறைவேறாத கனவுகள் பலிக்கலாம். கல்வி, பணியில் முன்னேற்றம். தொழிலில் வளர்ச்சி. நண்பர் வட்டம் விரியும். அதிர்ஷ்ட நிறம்: பழுப்பு | எண்: 9

**துலாம்** திடீர் செலவுகள் ஏற்படலாம். குடும்ப உறவுகளில் பொறுமை தேவை. பயணங்களில் கவனம். வழக்குகள் தவிர்க்கவும்.

**விருச்சிகம்** நல்ல செய்தி கிடைக்கும். திருமண முயற்சியில் முன்னேற்றம். சொத்துச் சிக்கல்கள் தீரும்.

**தனுசு** உங்கள் திறமையை பாராட்டப் பெறுவீர்கள். புதிய வாய்ப்பு. ஆதாயம் பெருகும். வெளியூர்ப் பயண வாய்ப்பு. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் | எண்: 7

**மகரம்** சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். விரோதிகள் சூழ்ச்சி செய்யலாம். ஆதாயம் குறைந்திருக்கும். பொறுமை அவசியம். அதிர்ஷ்ட நிறம்: கருப்பு | எண்: 6

**கும்பம்** தொழிலில் நல்ல முன்னேற்றம். கணவன்/மனைவி உறவுகளில் நல்ல சமரசம். ஆனந்த நாளாக அமையும். அதிர்ஷ்ட நிறம்: நீலம் | எண்: 3

**மீனம்** தினசரி பணிகளில் மேம்பாடு. உடல் நலம் மேம்படும். குடும்பத்தில் சந்தோஷம். வியாபாரத்தில் லாபம்.

# தூத்துக்குடியில் பள்ளி பெயரில் சாதி அடையாளத்தை நீக்க உத்தரவு




சென்னை ஜூலை 26

தூத்துக்குடி, காந்திநகர் பகுதியில் இந்து அரிசன தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. அரசு உதவி பெறும் இந்த பள்ளியின் பெயரில் உள்ள 'அரிசன' எனும் சாதி பெயரை நீக்க கல்வித் துறைக்கு உத்தரவிடக் கோரி பள்ளி தலைவர், செயலாளர் உள்ளிட்டோர் சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்தனர்.

அந்த மனுவில் அவர்கள், சாதி பெயரில் பள்ளிகள் செயல்படக்கூடாது என மதுரை ஐகோர்ட்டு கிளை ஏற்கெனவே உத்தரவிட்டிருப்பதாக சுட்டிக்காட்டி இருந்தனர். இந்த நிலையில் மனுவை விசாரித்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர், நீதிபதி தமிழ்வாணன், உறுப்பினர் ஆனந்தராஜா ஆகியோர் தூத்துக்குடி இந்து அரிசன தொடக்கப் பள்ளியின் பெயரில் சாதியை அடையாளப்படுத்தும் வகையில் உள்ள 'அரிசன' என்றவார்த்தையை நீக்க வேண்டும் என தொடக்கக்கல்வி இயக்குனருக்கு உத்தரவிட்டனர். மேலும், வருகிற சுதந்திர தினத்துக்கு முன்பாக இதனை செயல்படுத்தி அதுதொடர்பான அறிக்கையை ஆகஸ்டு 11ம் தேதிக்குள் தொடக்கக் கல்வி இயக்குனர் தாக்கல் செய்யவும் உத்தரவு பிறப்பித்தனர்.

# ராமநாதபுரம்: டிராக்டர் கவிழ்ந்து விபத்து: 3 பெண்கள் பரிதாப பலி



ராமநாதபுரம், ஜூலை 26

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே பொதிகுளம் கிராமத்தில் உள்ள ரேஷன் கடைக்கு கூவர்கூட்டம் கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் ரேஷன் பொருட்களை வாங்க வந்துள்ளனர். அதில் 11 பெண்கள், 2 ஆண்கள் ரேஷன் பொருட்கள் வாங்க டிராக்டரில் வந்திருந்தனர்.

இந்த நிலையில் ரேஷன் பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்பும் போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த டிராக்டர், பொதிகுளம் கிராமம் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பொன்னம்மாள்(60), ராக்கி (65), முனியம்மாள்(65) ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த 10 பேர் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி தாம்பரம் இடையே சிறப்பு ரெயில் சேவை நீட்டிப்பு



சென்னை, ஜூலை 26


தெற்கு ரெயில்வே திருச்சி தாம்பரம் இடையே சிறப்பு ரெயில் சேவையை முன்னதாக அறிவித்திருந்தது. அதன்படி திருச்சியில் இருந்து வரும் 29 முதல் ஜூன் 29ம் தேதி வரை, செவ்வாய், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில், காலை 5:35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில், அதே நாளில் நண்பகல் 12:30 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

மறுமார்க்கத்தில் தாம்பரத்தில் இருந்து மேற்கண்ட நாட்களில், மாலை 3:45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில், அதே நாளில் இரவு 10:40 மணிக்கு திருச்சி செல்லும் என தெற்கு ரெயிவே தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்த சிறப்பு ரெயிலின் சேவையை மேலும் நீட்டிக்க உள்ளதாக தெற்கு ரெயிவே அறிவித்துள்ளது. அதன்படி 1.08.2025 முதல் 31.08.2025 வரை (மேலும் ஒரு மாதத்திற்கு) இந்த சிறப்பு ரெயில் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளது என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில்கள், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, சிதம்பரம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு ரெயில்களுக்கான முன்பதிவு நாளை 8 மணி முதல் துவங்க உள்ளதும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வசந்த் ரவி நடித்த "இந்திரா" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




தரமணி, ராக்கி படங்களின் மூலம் கவனம் பெற்ற நடிகரான வசந்த் ரவி தற்போது 'இந்திரா' என்கிற படத்தில் நடித்து முடித்துள்ளார். இயக்குநர் சபரிஸ் நந்தா இயக்கத்தில் கிரைம் திரில்லர் கதையாக உருவான இப்படத்தில் நடிகர்கள் கல்யாண் மாஸ்டர் , சுனில், மெஹ்ரின் பிர்சாதா, அனிகா சுரேந்திரன் ஆகியோர் நடித்துள்ளனர்.

நயன்தாரா நடிப்பில் வெளியான ஐரா, மெட்ராஸ் டாக்கீஸ் தயாரிப்பில் உருவாகி பெரும் வரவேற்பை பெற்ற நவரசா போன்ற படங்களில் பணியாற்றிய சபரீஷ் நந்தா, தற்போது இயக்குனராக அறிமுகமாகிறார். வசந்த் ரவி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் இவருக்கு ஜோடியாக மெஹ்ரின் பிரசன்டா நடிக்கிறார். இப்படத்திற்கு 'சொப்பன சுந்தரி' படத்திற்கு இசையமைத்த அஜ்மல் தசீன் இசையமைக்கிறார். பிரபாகரன் ராகவன் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்.

சமீபத்தில் 'இந்திரா' படத்தின் கதாபாத்திர அறிமுக வீடியோவை படக்குழுவினர் வெளியிட்டனர். மருத்துவம், பிரேத பரிசோதனைப் பின்னணியில் காட்சிகள் அமைந்ததுள்ளதால் ரசிகர்களிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், வசந்த் ரவி நடித்த 'இந்திரா' படம் ஆகஸ்ட் 22ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# மாநிலங்களவை எம்.பி.யாக பதவியேற்ற கமல்ஹாசனுக்கு சுருதிஹாசன் வாழ்த்து



மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் இன்று மாநிலங்களவை எம்.பி.யாக பதவி ஏற்றுக் கொண்டார். அப்போது, "மாநிலங்களவையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட கமல்ஹாசன் எனும் நான் சட்டத்தினால் நிறுவப்பட்ட இந்திய அரசின் சட்டத்தின் மீது உண்மையான பற்று ஆர்வமும், பற்றுவதையும் கொண்டிருப்பேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் உறுதியாக பற்றி நிற்பேன் என்றும், நான் இப்போது ஏற்கவிருக்கும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்று உறுதியேற்கிறேன்" என்று தமிழில் கூறி பதவி ஏற்றார். இதைத் தொடர்ந்து, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. அலுவல்களில் கையெழுத்திட்டார். அவருக்கு நாடாளுமன்ற மேலவை சபாநாயகர் வாழ்த்துகளைத் தெரிவித்தார். முன்னதாக, அவர் தனது மகள் சுருதிஹாசன் உடன் காரில் நாடாளுமன்றத்துக்கு வந்தார்.

இதனை தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எதிர்க்க வேண்டிய இடத்தில், பகுத்தறிவுடன் அதைச் செய்வேன். ஆதரிக்க வேண்டிய இடத்தில், நான் அதை உறுதியுடன் செய்வேன். ஆலோசனை வழங்க வேண்டிய இடத்தில், அதை ஆக்கப்பூர்வமாக செய்வேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"மாநிலங்களவை எம்.பி.யாக நீங்கள் பதவியேற்றபோது உங்களது குரல் அவையில் எதிரொலித்த தருணம் என்றென்றும் என்னுடைய மனதில் நிலைத்திருக்கும்" என்று தந்தை கமல்ஹாசனுக்கு மகள் சுருதிஹாசன் இன்ஸ்டாவில் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# "ஹரிஹர வீரமல்லு" படத்தின் முதல் நாள் வசூல்




பவர் ஸ்டார் பவன் கல்யாண் அரசியல்வாதியும், தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரும் ஆவார். ஜோதி கிருஷ்ணா இயக்கத்தில், கீரவாணி இசையமைப்பில், பவன் கல்யாண், நிதி அகர்வால் மற்றும் பலர் நடிப்பில் நேற்று வெளியான படம் 'ஹரி ஹர வீரமல்லு'. பான் இந்தியா படமாக வெளியான இப்படம் முதல் நாளில் ரூ44 கோடி வசூலித்துள்ளதாக பாக்ஸ் ஆபீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. பவன் கல்யாண் நடித்து வெளிவந்த படங்களில் முதல் நாளில் அதிக வசூலைப் பெற்ற ஒரு படமாகவும் இது இருக்கிறது.

இப்படத்தின் மொத்த தியேட்டர் வியாபாரம் ரூ.120 கோடி வரை நடந்துள்ளது. இந்த வார இறுதியில் படம் லாபத்தைப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. படத்திற்கு கலவையான விமர்சனங்கள் வருவதும், மற்ற மொழிகளில் எதிர்பார்த்த அளவு வரவேற்பைப் பெறாததும் இப்படத்திற்கு நெகட்டிவ்வாக அமைந்துள்ளது.

# விரல் உடைந்து விட்டதுதானே..? உன்னால் விளையாட முடியுமா..? ரிஷப் பண்ட் கூறிய பதில்.. நெகிழ்ந்த ரவி சாஸ்திரி



இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டுடிராப்போர்டில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 114.1 ஓவர்களில் 358 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளும், ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் விளையாடி வருகிறது. இங்கிலாந்து பேட்ஸ்மேன்கள் மிகச்சிறப்பாக விளையாடி வருகின்றனர்.

முன்னதாக இந்த போட்டியின் முதல் நாள் ஆட்டத்தின்போது காலில் காயமடைந்த ரிஷப் பண்ட் பாதியில் வெளியேறினார். ஆனால் நேற்றைய ஆட்டத்தில் அணி விக்கெட்டுகளை இழந்து தடுமாறியபோது ரிஷப் பண்ட், வலியையும் பொருட்படுத்தாமல் நொண்டியபடி களத்திற்கு வந்து பேட்டிங் செய்தார்.


அவரது வருகையை கண்டு உற்சாகமடைந்த இந்திய ரசிகர்கள் கைதட்டி ஆரவாரமான வரவேற்பு அளித்தனர். அப்படி ஒற்றைக்காலில் போராடி அரைசதத்தை கடந்த ரிஷப் பண்ட் 54 ரன்கள் அடித்து அணிக்கு வலுவூட்டினார். இதனால் அவரை பல முன்னாள் வீரர்கள் பாராட்டி வருகின்றனர்.

இதனிடையே ரிஷப் பண்ட் உடனான மறக்க முடியான தருணம் ஒன்றை இந்திய முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி நினைவு கூர்ந்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்டின்போது ரிஷப் பண்ட் கைவிரலில் காயமடைந்தார். இதனால் அந்த போட்டியில் விக்கெட் கீப்பராக துருவ் ஜூரெல் செயல்பட்டார். ரிஷப் பண்ட் பேட்டிங் செய்தார்.

இந்த 4வது போட்டிக்கு முன்னதாக ரிஷப் பண்டை சந்தித்த ரவி சாஸ்திரி, கை விரல் காயம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு பண்ட் கூறிய பதில் ரவி சாஸ்திரியை நெகிழ வைத்துள்ளது.

இது தொடர்பாக ரவி சாஸ்திரி பேசியது பின்வருமாறு: "இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ்ட்க்கு முன் ரிஷப் பண்டிடம் உன் கைவிரல் எப்படி இருக்கிறது? உடைந்து விட்டதுதானே?. உன்னால் விளையாட முடியுமா? என்றேன். அதற்கு, 'விரல்கள் உடைந்தாலும், நான் விளையாடுவேன்' என்று பண்ட் சொன்னார். இது அவர் விளையாட விரும்புவதை காட்டுகிறது. அவர் டெஸ்ட் கிரிக்கெட்டை விரும்புகிறார், நாட்டிற்காக விளையாடுகிறார் என்பதை இது காட்டுகிறது. அவர் ஒரு அணி வீரரா என்று யாராவது சந்தேகித்தால் அதை நேரில் காண வேண்டும்" என்று கூறினார்.

# 4வது டெஸ்ட்: ஜோ ரூட் அபார சதம்.. முதல் இன்னிங்சில் 400 ரன்களை கடந்த இங்கிலாந்து



இந்தியா இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஒல்டுடிராப்போர்டில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 114.1 ஓவர்களில் 358 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகளும், ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 2வது நாள் ஆட்டநேர முடிவில் 46 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 225 ரன்கள் அடித்திருந்தது. ஆலி போப் 20 ரன்களுடனும், ஜோ ரூட் 11 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். தொடக்க ஆட்டக்காரர்களான ஜாக் கிராவ்லி 84 ரன்களிலும், பென் டக்கட் 94 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இத்தகைய சூழலில் 3வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஜோ ரூட் மற்றும் போப் சிறப்பாக பேட்டிங் செய்தனர். பென்டக்கட் கிராவ்லி கூட்டணி போல ஜோ ரூட் ஆலி போப் கூட்டணியும் சிறப்பாக விளையாடியது. இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்த ஆலி போப் 71 ரன்களில் வாஷிங்டன் சுந்தர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து களமிறங்கிய ஹாரி புரூக்கும் சுந்தர் பந்துவீச்சிலேயே வீழ்ந்தார்.

அடுத்து ஜோ ரூட்டுடன், கேப்டன் பென் ஸ்டோக்ஸ் கூட்டணி சேர்ந்தார். அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோ ரூட் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 38வது சதத்தை நிறைவு செய்தார்.

இங்கிலாந்து அணி தற்போது வரை 96 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 409 ரன்கள் அடித்து பேட்டிங் செய்து வருகிறது. இதன் மூலம் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் இந்தியாவை விட 51 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. ரூட் 105 ரன்களுடனும், ஸ்டோக்ஸ் 28 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.